- 05 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-3 திருக்குறள்களும் மற்றும் ஆத்திசூடி 1-5
- 06 வயதினருக்கு 1-4 திருக்குறள்களும் (4 இன் பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-8
- 07 வயதினருக்கு 1-6 திருக்குறள்களும் (4-6 பொருளும்) மற்றும் ஆத்திசூடி 1-11
- 08 - 09 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-7 திருக்குறள்களும் (4-7 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-5
- 10 - 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-9 திருக்குறள்களும் (4-9 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-11
- 13 - 15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு 1-11 திருக்குறள்களும் (4-10 பொருளும்) மற்றும் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 1-13

## திருக்குறள்கள்

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
   நிற்க அதற்குத் தக. (குறள் 391)

2. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
   ஆரிருள் உய்த்து விடும். (குறள் 121)

3. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
   மறைமொழி காட்டி விடும். (குறள் 28)

4. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
   ஆற்றின் அடங்கப் பெறின். (குறள் 123)

   **விளக்கம் :** அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும்.

5. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
   எழுமையும் ஏமாப் புடைத்து. (குறள் 398)

**விளக்கம் :** ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

6. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. (குறள் 864)

**விளக்கம் :** ஒருவன் சினம் நீங்காதவனாய், நெஞ்சத்தை நிறுத்தியாளும் தன்மை இல்லாதவனாய் இருந்தால் அவன் எக்காலத்திலும் எவ்விடத்திலும் எவர்க்கும் எளியவன்.

7. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது. (குறள் 103)

**விளக்கம் :** என்ன பயன் கிடைக்கும் என்று எண்ணிப் பார்க்காமலே, அன்பின் காரணமாக ஒருவர் செய்த உதவியின் சிறப்பு கடலை விடப் பெரிது.

8. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். (குறள் 44)

**விளக்கம் :** பொருள் சேர்க்கும் பொது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, செலவு செய்யும் போது பகுந்து உண்பதை மேற்க்கொண்டால், அவ்வாழ்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை.

9. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். (குறள் 291)

**விளக்கம் :** வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைக் சொல்லுதல் ஆகும்.

10. கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. (குறள் 9)

**விளக்கம் :** கேட்காதசெவி, பார்க்காத கண் போன்ற எண் குணங்களை உடைய கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றவைகளாம்.

11. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

**விளக்கம் :** நல்ல விருந்தினராய் வந்தவரை முகமலர்ச்சி கொண்டு போற்றுகின்றவனுடைய வீட்டில் மனமகிழ்ந்து திருமகள் வாழ்வாள்.